அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை: 04/2006 (I)

எனது இலக்கம்: EST-9/DICIP/06/0195
அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07

2013.10.31

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாணங்களின் பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
கூட்டுத்தாபனங்களின் தவிசாளர்கள்

**நாட்டில் ஏற்பட்டிருந்த நிலமை காரணமாக, 1983 யூலை மாதத்திற்குப் பின் தொழில்களை இழந்த அரச அலுவலர்கள், உள்ளூராட்சி சேவையின் அலுவலர்கள் மற்றும் கூட்டுத்தாபன பணியாளர்களுக்கு நிவாரணம் அளித்தல்**

மேற்படி விடயம் தொடர்பில் 2006.02.16 ஆம் திகதிய 04/2006 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின்பால் தங்களின் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

02. பின்வரும் திருத்தங்களுக்கு உட்பட்டு கூறப்பட்ட சுற்றறிக்கையின் 12 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட மேன்முறையீடுகளை ஏற்றுக்கொள்வதற்கான திகதியினை 2013.12.31 ஆம் திகதிவரை நீடிப்பதற்கு 2013.10.03 ஆம் திகதியில் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

I. 04/2006 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைக்கு அமைய 2006.06.30 ஆம் திகதிக்கு முன்னர் மேன்முறையீடுகளை சமர்ப்பித்திருந்த அலுவலர்கள் அத்தகைய மேன்முறையீடுகள் நிராகரிக்கப்பட்டிருந்தால் மீண்டும் மேன்முறையீட்டினை மேற்கொள்ள முடியாது.

II. சேவைக்கு மீண்டும் அறிக்கையிடுவதற்கு அல்லது ஓய்வுபெறுவதற்கு சந்தர்ப்பத்தினைக் கொண்ட ஆனால் நியாயமான காரணங்களினால் ஏற்கனவேயுள்ள சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய உரிய காலப்பகுதியில் மேன்முறையீடொன்றினைச் சமர்ப்பிக்கத் தவறிய அலுவலர்களுக்கு, அத்தகைய விடயங்கள் சத்தியக்கடதாசி ஒன்றின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டால் மாத்திரமே மேன்முறையீடொன்றினைச் சமர்ப்பிப்பதற்கான சந்தர்ப்பம் ஒன்று வழங்கப்பட முடியும்.

III. மேன்முறையீடுகள் சமர்ப்பிக்கும் அலுவலர்கள் குறித்து பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சிடமிருந்து பாதுகாப்பு தடைநீக்க அறிக்கை ஒன்று பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

3. மேலே பந்தி 02 இல் குறிப்பிடப்பட்ட திருத்தங்களை விட 04/2006 ஆம் இலக்கங்கொண்ட அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் ஏனைய ஏற்பாடுகள் தொடர்ந்தும் மாற்றமுறாமல் இருக்கும்.

ஒப்பம்/ பி.பீ. அபேகோன்
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு